## அறிமுகம்

# பிரிவினை

# இது ஏன் நேர்ந்தது?

*வேதபாடப் பகுதி: 1 & 2 இராஜாக்கள்*

*ஒரு சில வாரங்களுக்கு முன்பு, நீண்டகாலமாக, நன்கு மதிக்கப்பட்ட சுவிசேஷப் பிரசங்கியார் ஒருவர் தமது மனைவிக்கு உண்மையற்றவராகிப் போய், தமது திருமண வாழ்வை அழித்துக்கொண்டார் என்ற செய்தி வந்தது. அந்தச் செய்தி என்னைத் திகைக்கச் செய்தது. இது ஏன் நடைபெற்றிருக்கக் கூடாது என்பதற்கான காரணங்கள் யாவற்றையும் நான் உடனடியாக நினைத்துப் பார்த்தேன். எனக்குள்ளேயே நான், "அவர் வேதவாக்கியங்களை அறிந்திருந்தாரே. அவர் பல ஆண்டுகளாக நீதிக்கு ஒப்புக்கொடுத்தல் பற்றி வெளிப்படையாகவும் தனிப்பட்ட முறையிலும் போதித்திருந்தாரே. அவர் ஞானமுள்ளவராக, பாவத்தின் இயல்பு பற்றி அறிந்தவராக இருந்தாரே. அவர் எவரொருவரையும் தேவன்மீது பற்றுதலாயிருக்கும்படி ஊக்கப்படுத்தும் தேவபக்தியுள்ள மக்களினால் தொடர்ந்து சூழப்பட்டிருந்தாரே."*

*"இல்லை," "இது நடந்திருக்க முடியாது" என்று நான் எனக்குள் கூறிக் கொண்டேன். இருப்பினும், அந்த செய்தியானது, மிகவும் சரியானதாக இருந்தது; அது நடந்திருந்தது. அவர் ஒரு உண்மையான கிறிஸ்தவராயிருப்பதற்குப் பல அனுகூலமான சூழ்நிலைகளைக் கொண்டிருப்பினும், தனது வாழ்வையும் இல்லத்தையும் நொறுக்கிப்போட்டு, தமது பிரசங்கப் பணியை சிதைப்பதற்குச் சாத்தானை அனுமதித்திருந்தார்.*

*நாம் இஸ்ரவேல் நாடு துண்டு துண்டாகப் பிரிந்ததைப் பற்றி வாசிக்கும்போது, இதேபோன்ற சிந்தனை நமக்கு வருகிறது. சாமுவேலின் நாட்களின்போது (1 சாமுவேல் 8:1-4), மக்களின் வேண்டுகோள்களைக் கேட்ட தேவன், அதற்கிணங்கி அவர்களுக்கு ஒரு அரசரைக் கொடுத்தார். முதல் மூன்று அரசர்களின் - சவுல், தாவீது, மற்றும் சாலொமோன் - மூலமாக, (தாவீதின் முதல் $7\frac{1}{2}$ ஆண்டுகள் ஆட்சிக்காலம் உள்ளடக்கப்பட்டதென்றால்[1]), 120 ஆண்டுகள் காலத்திற்கு இஸ்ரவேலின் முடியாட்சியானது ஒருமைப்பாட்டையும் ஆபிரகாமுக்குத் தேவனின் வாக்குத்தத்தத்தினுடைய ஒரு பகுதி நிறைவேற்றமான உலகப்பிரகாரமான ராஜ்யத்தையும் (ஆதியாகமம் 12:5-7) மகிழ்வுடன் அனுபவித்திருந்தது. சாலொமோனின் மரணம் மற்றும் ரெகொபெயாம் பட்டத்திற்கு வருதல் ஆகியவற்றுடன் ஒரே ராஜ்யமாயிருந்த இஸ்ரவேலின் ஒருமைப்பாடு என்றென்றைக்குமாக உடைந்துபோயிற்று. அது பத்துக்கோத்திரங்கள் கொண்ட வடக்கு ராஜ்யம்,*

இரண்டு கோத்திரங்களை கொண்ட தெற்கு ராஜ்யம் என்று இருபகுதிகளாகப் பிரிவுபட்டது, இந்தத் தெற்கு ராஜ்யத்தில் யூதா மற்றும் பென்யமீன் என்ற இரண்டு கோத்திரங்களிருந்தன.

"இது இஸ்ரவேல் அல்ல!" என்று நாம் கூறுகின்றோம். வேறு எந்த நாடும் சட்டத்திற்குப் புறம்பாகச் சென்றுவிடலாம், ஆனால் தேவனுடைய நாடு அவ்வாறு செல்லாது என்று நாம் எதிர்பார்க்கலாம்! இஸ்ரவேல் நாடு தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டிருந்தது, தேவனால் வழிநடத்தப்பட்டிருந்தது, இது உலகத்தின் வரலாற்றில் வேறு எந்த நாட்டைப் பார்க்கிலும் அதிகமாகத் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. இஸ்ரவேல் நாடு தேவனுடைய கரத்தை எண்ணற்ற முறைகள் பார்த்திருந்தது. அவரது அற்புத வல்லமையானது, அவர்களின் விரோதிகளைத் தோல்வியுறச்செய்து அவர்களுக்கு [இஸ்ரவேல் மக்களுக்கு] அன்றாட உணவை அளித்திருந்தது. அவர்கள் தேவனை அறிந்திருந்தனர் மற்றும் அவரது உதவியைப் பெற வழிகொண்டிருந்தனர். இந்த நிகழ்ச்சிகளை நாம் வாசிக்கையில், "இஸ்ரவேல் நாடு தனக்கு நேரிடும் எந்த சோதனைகளிலும் இடர்ப்பாடுகளிலும், பலமாகவும் ஒன்றித்தும் நிற்கும் என்பது உறுதி. பிரிவினை நடக்காது, நடக்க முடியாது" என்று நாம் நினைக்கலாம். இருந்தபோதிலும், இஸ்ரவேல் நாடு பிரிவுபட்டது.

ஏன்? இது எவ்வாறு வந்தது?

தெளிவாய் உணரப்பட்ட ஐந்து காரணிகள் இந்தப் பிரிவினைக்குப் பங்களித்தன.

## பொறாமை

கோத்திரங்களுக்கு இடையில் நீண்டகாலமாக நிலைத்திருந்த ஒரு பொறாமை நிலவியதாகக் காணப்படுகிறது. கிதியோன், முந்நூறு மனிதர்களுடன் பகைவரை வெற்றிகொண்ட பின்பு, எப்பிராயீம் மனிதர்களிடத்தில் இருந்து, அவர் பொறாமை நிறைந்த பின்வரும் கேள்வியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது: "நீ மீதியானியர்மேல் யுத்தம்பண்ணப் போகிறபோது, எங்களை அழைப்பிக்கவில்லையே, இப்படி நீ எங்களுக்குச் செய்தது என்ன?" (நியாயாதிபதிகள் 8:1). எப்பிராயீம் கோத்திரத்தினர் செய்திருந்தவற்றைக் குறித்து அவர்களைப் புகழ்ந்ததின்மூலம் கிதியோன் அந்தக் கலகத்தை அமர்த்த முடிந்தது. இருப்பினும், பல ஆண்டுகளுக்குப் பின்பு, எப்பிராயீம் மனிதர்கள், எப்தாவை ஒரு சிறிய கேள்வியுடன் எதிர்த்து நின்றனர், அதன் மூலமாக ஒரு உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டது (நியாயாதிபதிகள் 12:1-3). தாவீதின் பிந்திய நாட்களின்போது, யூதாவினுடைய மனிதர்கள் அவரை, அப்சலோமிடமிருந்து அவர் தப்பியோடிப் பின்திரும்பி வந்தபோது, வரவேற்றனர். ஆனால் மற்ற கோத்திரத்தார் தாவீதிடம், "எங்கள் சகோதரராகிய யூதா மனுஷர் திருட்டளவாய் உம்மை அழைத்து வந்து, ராஜாவையும், அவர் வீட்டாரையும், அவரோடேகூட இருக்கிற தாவீதின் மனுஷர் அனைவரையும், யோர்தானைக் கடக்கப் பண்ணினது என்ன?" என்று கோபத்துடன் கேட்டனர் (2 சாமுவேல் 19:41). சேபாவினால் வழிநடத்தப்பட்ட, பதினோரு கோத்திரத்தார் யூதாவை விட்டுப்பிரிந்து

*சென்றனர், அவர்கள் பின்வரும் பேரணிக்கோஷத்தைப் பயன்படுத்தினர்: ''எங்களுக்குத் தாவீதினிடத்தில் பங்கும் இல்லை, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமும் இல்லை; ...'' (2 சாமுவேல் 20:1). தாவீது சேபாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார், பிரிவினை மென்மையாகத் தீர்த்துவைக்கப்பட்டது; ஆனால் இந்த நிகழ்ச்சியானது, ரெகொபெயாமின் காலத்தில் நடைபெறவிருந்த நிலையான பிரிவினைக்கு ஒரு முன்கண்ணோட்டமாயிற்று.*

*பொறாமை என்ற வடு ஒன்று பல ஆண்டுகள் இருக்கும்படி அனுமதிக்கப்பட்டது, முழுமையாக ஊதிப்பெரிதாக்கப்பட்ட பிரிவினையை ஏற்படுத்துவதற்கான அழகற்ற ஆவிக்கு ரெகொபெயாம் காரணமானார். பண்பு என்பது ஒரு இக்கட்டான சூழ்நிலையில் உண்டாக்கப்பட்டு விடுவதில்லை, ஆனால் வெளிப்படுத்தப்பட மாத்திரமே செய்யப்படுகிறது, அதுபோலவே, துன்மார்க்கம் என்பது நீண்டகாலமாகத் தேங்கியிருக்கவும் பின்பு அது நெருக்கத்தின் காலத்தில் பெருவெள்ளமாகப் பாய்ந்து ஓடவும் செய்கிறது.*

## செய்தித்தொடர்பில் குறைபாடு

*யூதாவானது எஞ்சிய மற்ற கோத்திரங்களில் இருந்தும் வடக்கு பலஸ்தீனத்தின் மலைப்பகுதிகளில் இருந்தும் புவியியல்ரீதியாக அமைந்திருந்த தொலைவானது, இஸ்ரவேல் சமூகத்தின் இவ்விரு பிரதான பிரிவுகளுக்கும் இடையில் செய்தித்தொடர்பைக் கடினமாக்கியிருக்க வேண்டும். கிருபையினால் தேவன், அவர்களுக்கு இந்த எல்லைப் பகுதியைக் கொடுத்திருந்தார். இருப்பினும், தேவனுடைய மக்களின் பண்பு என்று காணப்படும் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பராமரிப்பதற்கு முயற்சி தேவைப்பட்டிருந்தது. ''வாழ்வில் அமைவு'' பெறுதலும், நல்ல குடும்பம் மற்றும் சமூக வாழ்வு ஆகியவற்றைப் பெறுவதிலுள்ள அறைகூவல்களைச் சந்திப்பதைக் காட்டிலும் வாழ்வை உள்ளபடியே ஏற்றுக்கொள்ளுதலும் சுலபமாகக் காணப்படுகிறது.*

*நாடுகளும் குடும்பங்களும் இஸ்ரவேல் மக்களினத்திடம் இருந்து ஒரு வலிவார்ந்த பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். செய்தித் தொடர்புக்குக் காலம் தேவைப்படுகிறது. துன்மார்க்கம் வெற்றிபெறுவதற்கு ஒருவர் செய்ய வேண்டியதெல்லாம், ஒன்றும் செய்யாதிருப்பதேயாகும். சீர்கேடு என்பது தவறுதலின்மூலம் வருவது போன்றே மறைவற்ற துன்மார்க்கத்தின் கைகளில் தோல்வியினாலும் வருகிறது. குறுகிய காலத்திலேயே, தவறான தகவல்கள் நம்பப்படவும் அன்பான உறவுமுறைகள் கசப்புள்ளதாகவும் கூடும். இசைவிணக்கத்துடன் வாழுதல் என்பதற்கு காலம், செய்தித் தொடர்பு மற்றும் ஒன்றுகூடியிருத்தல் ஆகியவை தேவைப்படுகின்றன.*

## விக்கிரகாராதனை

*சாலொமோனின் ஆட்சிகாலத்தின்போது, புறதெய்வ வழிபாடு உட்புகுந்த நிகழ்ச்சியானது, கோத்திரங்களைப் பாதுகாப்பாக ஒன்றுகூட்டி*

யிருந்த ஆவிக்குரிய பிணைப்பையும், யெகோவாவிற்கு ஆராதனையையும் பெலவீனப்படுத்திற்று. செய்தித்தொடர்பில் குறைபாடு என்பது கவனக் குறைவாக இருந்தது, ஆனால் விக்கிரகாராதனையை ஏற்றுக்கொள்ளுதல் என்பது விசுவாச விலக்கமாய் இருந்தது. பிரிவினை என்பது விசுவாச விலக்கத்தின் கனிகளில் ஒன்றாக உள்ளது.

தேவனை ஆராதனை செய்வதில் உண்மையற்று இருத்தல் என்பது எப்போதுமே ஒரு நாட்டிற்கும் ஒரு குடும்பத்திற்கும் சாவுக்கேதுவானதாக உள்ளது. தேவனைக் கைவிட்டுவிடுகின்ற மக்கள், இடர்பாடு, பயங்கரமான சிரமம் ஆகியவற்றை நோக்கிச் செல்லுகின்றனர். பிரிவினை என்பது எப்போதுமே இதன் விளைவாய் இராதிருக்கலாம், ஆனால் தேவனை விட்டு விலகுதல் என்பது எப்போதுமே ஒரு தீவிரமான மற்றும் பேரழிவான செயல்விளைவைக் கொண்டிருக்கும்.

## ஆலோசனையின்மை

சாலொமோன் தனது கட்டுமானத் திட்டங்களில் கொண்டிருந்த ஆடம்பரம் மற்றும் வற்புறுத்தல்கள் அளவுக்கு அதிகமான வரிவிதிப்பு மற்றும் வற்புறுத்தி வாங்கப்பட்ட உடல் உழைப்பு ஆகியவற்றை விளைவித்தன, இது மக்களின் இருதயங்களில் புகைச்சலை எழுப்பும் ஆழமாக அமர்ந்த விரோதத்திற்கு காரணமாயிற்று. வரிவிதிப்பில் ஒரு குறிப்பிட்ட பங்கு அவசியமானதாகவும் சரியானதாகவும் உள்ளது; ஆனால் வரிவிதிப்பு என்பது பணம் மற்றும் சுய தியாகம் ஆகியவற்றை மிகவும் அதிகமாக வற்புறுத்துகிறபோது, விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, கலகம் பொங்கியெழுகிறது.

ரெகொபெயாம் ஆளத்தொடங்கிய பின்பு, அவரிடத்தில் மக்கள் வைத்த கேள்வியானது அவர்களை அமிழ்த்திக் கொண்டிருந்த பாரங்களுக்கு அவர்கள் கொண்டிருந்த கூருணர்வைச் சுட்டிக்காண்பித்தது:

> அவர்கள் யெரொபெயாமுக்கு ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தார்கள்; அவனும் இஸ்ரவேல் சபை அனைத்தும் வந்து, ரெகொபெயாமை நோக்கி: "உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம்" என்றார்கள் (12:3, 4).

மூன்று நாட்கள் ஆலோசனைக்குப் பின்பு, ரெகொபெயாம், சாலொமோன் கேட்டுக்கொண்டிருந்தவற்றைக்காட்டிலும், தான் அதிகம் கேட்கப்போவதாக அறிவித்தார். அது தன் வேலையைச் செய்தது! அவர்கள் இனியும் பொறுக்கக்கூடாதிருந்தனர்.

## அற்பமான நடத்துவத்துவம்

முதியவர்களும் ஞானமுள்ளவர்களுமாய் இருந்தவர்களின் பேச்சைக் கேட்பதைவிட்டு, இளம் மனிதர்களின் ஆலோசனையைக் கேட்டது ரெகொபெயாமின் பகுதியில் மதியீனமானதாக இருந்தது (12:8). வழக்க மாக, மக்கள் உடனடியாக பிரிவினையில் இயல்பு திரிந்து சென்று விடுவ தில்லை; அவர்கள் அதில் வழிநடத்தப்படுகின்றனர்! நியாயமான அளவு ஞானம் கொண்ட சரியான நடத்துனர், இந்தச் சிதைவு ஏற்படாமல் தடுத்திருக்கவும், பல ஆண்டுகளாக உருவாகிக்கொண்டிருந்த விரிசலை ஒன்றாக ஒட்டியிருக்கவும் முடியும். ரெகொபெயாம் தவறான மனித ராய் இருந்தார். அவர் சதுர முளை தேவைப்பட்ட இடத்தில் உருளை முளைபோன்றிருந்தார். அவரிடத்தில் தேவையற்ற விஷயங்கள் இருந்தன மற்றும் தேவையானவற்றைக் கொண்டிராதிருந்தார். அவர் மேட்டிமை, சுயசித்தம், மற்றும் துடுக்குத்தனம் ஆகியவற்றை அதிகம் கொண்ட வராகவும், பொதுக்கருத்துணர்வு, ஆழ்ந்தசிந்தனை, மற்றும் தாழ்மை ஆகியவற்றில் குறைவானராகவும் இருந்தார்.

பொறாமை, செய்தித்தொடர்பில் குறைபாடு, விக்கிரகாரதனை, ஆலோசனையின்மை, மற்றும் அற்பமான நடத்துவத்துவம் ஆகியவற்றை ஒன்றாகக்கூட்டிச் சேர்த்துப் பாருங்கள்; அவற்றை இடர்ப்பாடான காலத்தில் நன்கு கலக்குங்கள்; அப்போது பெரும்பாலும், நீண்டகாலப் பிரிதல் மற்றும் பிரிவினை ஆகியவற்றைப் பிறப்பிக்கும் குரோத உணர்வுடைய விரோதம் விளைகிறது. நாம் இதைக் கண்ணோக்கி கற்றுக்கொள்வோம்.

## முடிவுரை

தேவபக்தியற்ற இந்த மக்களினத்திற்கு, தேவபக்தியுள்ள நடத்துவத்தில் குறைவு ஏற்பட்டதன் நிமித்தம், பிரிவினை ஏற்பட்டது. உதித்தெழுந்த இரு நாடுகள் எதைப்போன்று காணப்பட்டன?

இஸ்ரவேல் நாடு ஏறக்குறைய 9,375 சதுர மைல்கள் பரப்பளவு கொண்டிருந்தது, இது யூதாநாட்டின் பரப்பளவைப்போல ஏறக்குறைய மூன்று மடங்கு இருந்தது. இதன் எல்லைப்பகுதி பெரிதாய் இருந்தது மட்டுமின்றி, யூதாவைக் காட்டிலும் இது இயற்கை வளம் மிகுந்திருந்தது. இஸ்ரவேல் எல்லைகளில் பரிசுத்த இணைவிடங்கள் மிகுந்திருந்தன: சீகேம், இது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில் ஆபிரகாம் முதன்முதல் பலிபீடம் கட்டிய இடம் ஆகும்; சீலோ, இது ஆசரிப்புக்கூடாரம் பல ஆண்டுகளாக வைக்கப்பட்டிருந்த இடம் ஆகும்; பெத்தேல், ராமா, மற்றும் கில்கால், இவைகள் தீர்க்கதரிசியாயிருந்த சாமுவேல் பிரசங்கித்து ஜெபித் திருந்த இடமாகும். வடக்கு ராஜ்யம் தனது பெரிய நிலப்பகுதி மற்றும் பத்துகோத்திரங்கள் கொண்டிருந்தமை ஆகியவற்றால், யூதாவைப்போல் இருமடங்கு ஜனத்தொகை கொண்டிருந்தது. இவ்விதமாக வடக்கு ராஜ்யம் இஸ்ரவேல் என்ற நாட்டின் பெயரைத் தக்க வைத்துக் கொண்டது. இந்தப் பிரிவினைக்குப் பின்பு, வேதவசனங்களில் “இஸ்ரவேல்” என்ற

சொற்றொடர் வடக்கு ராஜ்யத்திற்கே வழக்கமாக குறிப்பிடப்பட்டது.

இருப்பினும், எருசலேமைத் தலைநகரமாகக் கொண்டிருந்த யூதா நாடும், இஸ்ரவேலைக் காட்டிலும் அதிகமாக, தீர்மானமான சில அனுகூலங்கள் கொண்டிருந்தது. எருசலேமைத் தலைநகராகக் கொண்டிருத்தல் என்பது, யூதா நாடு அரசாங்கத்தின் அமைவுமுறையின் தலைநகரத்தையும் நாட்டிற்குத் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட மதரீதி யான மையத்தையும் கொண்டிருந்தது என்று அர்த்தப்படுத்திற்று. எருசலேம் நகருடன், தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் செல் வங்கள் என்ற உலகப்பிரகாரமான வளத்தினுடைய கருவூலங்களும் வந்தன. தேவாலயத்தைக் கொண்டிருத்தல் என்பது, காலங்கள் கடந்து செல்லுகையில், தேவனை நாட விரும்பிய ஆசாரியர்களும் மக்களும் வடக்கில் இருந்து தெற்கிற்குப் புலம்பெயர்ந்து வருவார்கள் என்பதையும் அர்த்தப்படுத்திற்று (2 நாளாகமம் 15:9, 10).

யூதா நாடு 3,435 சதுர மைல்கள் பரப்பளவுடையதாக இருந்தது, ஆனால் அதன் மதரீதியான வலிமையானது. அதற்கு மாபெரும் உறுதித் தன்மையைக் கொடுத்தது. யூதா ஒரு தேவாலயத்தையும், தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் நகரமாகிய எருசலேம் என்ற ஒரு தொடர்ந்த தலைநகரையும் கொண்டிருந்ததன் மூலமாக அதற்கு பலம் வந்தது. இஸ்ரவேல் ஆராதனைக்கு, தாண் மற்றும் பெத்தேல் என்ற இரு இடங்களைக் கொண்டிருந்தது, மற்றும் வரிசையாகப் பல தலைநகரங் களைக் கொண்டிருந்தது: சீகேம், திர்சா, மற்றும் சமாரியா. இது இஸ்ர வேலுக்கு ஒருமைப்பாட்டைக் கடினமாக்கிற்று.

இஸ்ரவேல் கி.மு. 931ல் இருந்து 721 வரை, அதாவது, 209 ஆண்டுகள் காலம் மாத்திரம் தொடர்ந்து நிலைத்திருந்தது. இருப்பினும் அந்தக் காலவேளையில் அது அரியணையில் அமர்ந்த ஒன்பது வம்சங்களைச் சேர்ந்த பத்தொன்பது அரசர்களைக் கண்டது. ஒவ்வொரு புதிய வம்சமும் கொலையில் தொடங்கி கொலையில் முடிந்தது. யூதா கி.மு. 931ல் இருந்து 586 வரை., அதாவது, 345 ஆண்டுகள் நீடித்திருந்தது, இதில் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்த இருபது அரசர்கள் இருந்தனர். அத்தாலியாள் என்ற அரசியின் ஆட்சி, ஆறு ஆண்டுகள் அரியணையைச் சட்டத்திற்குப் புறம்பாகக் கைப்பற்றிய காலகட்டத்தில் மாத்திரமே, தாவீதின் வம்சாவழி இணைப்பு அறுக்கப்பட்டிருந்தது.

சமாரியாவின் அழிவு மற்றும் வடக்கு ராஜ்யம் அசீரியர்களால் அடிமைப்படுதல் ஆகியவற்றிற்குப் பின்பு, தெற்கு ராஜ்யம் 136 ஆண்டுகள் தொடர்ந்து நிலைத்திருந்தது, அதன்பின்பு பாபிலோனியர்களால் அடிமைத் தனத்தில் பிடிக்கப்பட்டுச் சென்றது.

வடக்கு ராஜ்யம் முற்றிலுமாக மறைந்து, ஒருக்காலும் திரும்பக் கட்டுவிக்கப்படாதிருக்கையில், தெற்கு ராஜ்யம், எழுபது ஆண்டுகள் சிறையிருப்புக்குப் பின்பு, எருசலேமுக்குத் திரும்பிய எஞ்சியிருந்த மக்களால் உயிர்ப்பிக்கப்பட்டு, எருசலேம் நகரும் தேவாலயமும் திரும்பக் கட்டப்பட்டன.

இரு ராஜ்யங்களின் எழுச்சி, மற்றும் வீழ்ச்சி பற்றிய வரலாறு, அவற்றின்

உருவாக்கம் முதல் அவர்களின் முறையான முடிவுகள் வரையிலான விஷயங்கள் ஆகியவை, யூதா மற்றும் இஸ்ரவேல் நாடுகளில் இருந்த தீர்க்கதரிசிகள் மற்றும் அரசர்கள் ஆகியோரைச் சுற்றிச்சுழலுகின்றன. ஆகையால், இவ்விரு ராஜ்யங்களைப் பற்றிய எந்த ஒரு படிப்பும், அவற்றின் தீர்க்கதரிசிகள் மற்றும் அரசர்களைப் பற்றிய படிப்பாயிருக்க வேண்டியது அவசியமாகிறது.

***கற்க வேண்டிய பாடம்:***
***தேவனிடம் செல்லும் வாயிலுக்கு அருகில்***
***நரகத்தின் கதவு இருக்கிறது.***

---

குறிப்பு

[1]*2 சாமுவேல் 5:4ஐக் காணவும்.*